*மாண்புமிகு பேரவைத் தலைவர்:* வினா எண் 468, டாக்டர் வெ. சரோஜா, மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர்.

**468—**

## காளான் விதை தயாரிக்க விவசாயிகளுக்குக் கடன் மற்றும் மானியம் வழங்குதல்.

*** 22639**—டாக்டர் வெ. சரோஜா:*

மாண்புமிகு வேளாண்மைத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) காளான் விதை தயாரிக்கும் பயிற்சி பெற்ற விவசாயிகளுக்கு, காளான் விதை தயாரிப்புக் கூடம் அமைக்க கடன், மானியம் வழங்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

(ஆ) ஆம் எனில், விபரம் என்ன?

*மாண்புமிகு திரு கு.ப. கிருஷ்ணன், வேளாண்மைத்துறை அமைச்சர்:* மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) இல்லை.

(ஆ) எழவில்லை.

*டாக்டர் வெ. சரோஜா:* மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வேளாண்மைத் துறையில் நவீன தொழில் நுட்பங்கள் அனைத்தும் விவசாயிகளுக்கு விரைந்து சென்றடைய வேண்டும். புதிய சிந்தனைகளால் உற்பத்தித் திறன் பெருக வேண்டுமென்ற மையக் கருத்தினை மையமாகக் கொண்டு, மாண்புமிகு டாக்டர் புரட்சித் தலைவி அவர்களின் பொற்கால அரசு நடத்திக் கொண்டிருக்கிறது. காளான் உற்பத்திக்கு அதிகமான நிதியை ஒதுக்கீடு செய்து தந்த மாண்புமிகு இதயதெய்வம் அவர்களுக்கு நன்றியைத் தெரிவித்துக் கொண்டு, காளான் உற்பத்தியில் ஒதுக்கப்பட்ட நிதி எவ்வாறு செலவிடப் படுகிறது? ஒதுக்கப்பட்ட நிதியில், காளான் உற்பத்திக்கு அதிக ஆர்வம் காட்ட முன்வரும் விவசாயிகளுக்கு கடன் மற்றும் மானியம் வழங்க அரசு ஆவன செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

*முற்பகல் 10-35*

*மாண்புமிகு திரு. கு. ப. கிருஷ்ணன்:* மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, காளான் உற்பத்திக்கு என்று 1993-94–ஆம் ஆண்டில்

1994 மே 2]

ரூ. 31,50,000 இத்திட்டத்திற்கு வழங்கப்பட்டது. இத்தொகையைக் கொண்டு இந்தக் காளான் வளர்ப்பில் ஈடுபடக்கூடிய உழவர் பெருமக்களுக்கு அல்லது இந்தத் தொழிலில் ஆர்வமுடன் பயிலவரக்கூடிய நபர்களுக்கு பயிற்சி வழங்கப்படுகிறது. இந்தப் பயிற்சியின் முடிவில் அவர்களுக்குத் தரமான விதைக்காளான்கள், உபகரணங்கள் ஆகியவைகளை 300 ரூபாய் பெறுமான அளவுக்கு அரசு மானியமாக வழங்கி வருகிறது. எனவே இந்தப் பயிற்சி பெற்றவர்கள் அல்லது தனியாரிடத்தில் பயிற்சி பெற்றவர்களுக்கு இந்தத் தொழிலை அவர்கள் துவங்குவதற்கு முன்வருவார்கள் என்று சொன்னால் அரசாங்கம் மானியம் தர இயலாது, கடன் தர இயலாது. ஆனால் கூட்டுறவுச் சங்கத்திலோ தேசிய மயமாக்கப்பட்ட வங்கிகளிலோ இவர்கள் கடனைத் தேவையான அளவுக்குப் பெற்றுக் கொள்ளலாம். பெரிய அளவில் தொழிலைச் செய்ய முன்வருபவர்களுக்கு அதிகப்படியான முதலீடு தேவை என்று அரசாங்கத்திடம் விண்ணப்பம் செய்தால் அந்த விண்ணப்பம் தேசிய தோட்டக்கலை வாரியத்திற்கு அனுப்பப்பட்டு அங்கேயிருந்து நிதி உதவி பெற்றுத் தருவதற்கு அரசு ஆவன செய்யும்.

டாக்டர் வெ. சரோஜா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தியத் துணைக்கண்டத்திலேயே முதன்மையாக விளங்குவது நமது தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம். வேளாண் பெருமக்களின் நன்மைக்காகவும் வேளாண்மை மற்றும் வேளாண்மை சார்ந்த தொழில்களின் வளர்ச்சிக்காகவும் வேளாண் விதை பெருக்கமும், வினியோகமும் என்ற தலையாய பணியை ஒன்றாகக் கொண்டு செயல்பட்டுவரும் மாண்புமிகு இதயதெய்வம் டாக்டர் புரட்சித்தலைவியின் பொற்கால ஆட்சியில் என்னுடைய தொகுதிக்கு உட்பட்ட சங்ககிரியில் சேவூர் பேரூராட்சிக்கு உட்பட்ட இடத்தில் 20 பெண்களைத் தேர்ந்தெடுத்து தனியார் மூலம் பயிற்சி கொடுக்கப்பட்டு இன்று அவர்கள் நல்ல முறையில் கூட்டுறவுத் துறையில் கடன் பெற்று தொழில் துவங்கியிருக்கிறார்கள் என்ற நற்செய்தியை இங்கே தெரிவித்து, என்னுடைய தொகுதியில் மேலும் பல பெண்கள் இந்தத் தொழிலில் ஆர்வம் காட்டுவதால் சங்ககிரியில் ஒரு காளான் உற்பத்தி பயிற்சி நிலையமும் காளான் விதை உற்பத்தி மையமும் அமைத்துக் கொடுக்க அரசு ஆவன செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கு. ப. கிருஷ்ணன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, காளான் பயிற்சிக்கு என்று ஒரு மையத்தை அரசால் துவக்க இயலாது. இந்தப் பயிற்சி என்பது ஒருநாள் கொடுத்தாலே போதுமானது.

[1994 மே 2

எனவேதான் தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக் கழகத்திலே ஒவ்வொரு மாதமும் 5-ந்தேதி பயிற்சி வழங்கப்பட்டு வருகிறது. அதைப்போல் 6 இடங்களில் சென்ற வாரம்கூட திரூர் நெல் ஆராய்ச்சி நிலையத்தில்கூட 12ந் தேதி பயிற்சி தரப்பட்டிருக்கிறது. இதுபோன்ற பயிற்சி வகுப்புகளில் பங்குபெற ஆர்வம் காட்டுபவர்கள் அங்கே சென்று அந்தப் பயிற்சியைப் பெற்று வரலாம். அவர்கள் போய் வருவதற்கு செலவுக்கான தொகையும் இதர பொருள்களும் அரசு சார்பில் வழங்கப்பட்டு வருகின்றன என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண்கள் 469-ம், 470-ம் பின்னர் எடுத்துக் கொள்ளப்படும்.

வினா எண் 471, திரு. ஆர். பி. பரமசிவம், மாண்புமிகு சமூக நலத்துறை அமைச்சர்.

**471—**

**சென்னையில் குப்பை பொறுக்கும் சிறார்களுக்குப் புகலிட இல்லங்கள் கட்டுதல்**

*** 23703—திரு. ஆர்.பி. பரமசிவம்:**

மாண்புமிகு சமூகநலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா?

(அ) சென்னையில் குப்பைப் பொருள்களை சேகரிக்கும் சிறாருக்கும், இதர சிறார்களுக்கும் புகலிட இல்லங்கள் எங்கெங்கு கட்டப்படவுள்ளது.

(ஆ) இதர நகரங்களிலும் இது போன்ற இல்லங்கள் கட்ட அரசு ஆவன செய்யுமா?

**மாண்புமிகு திருமதி இரா. இந்திரகுமாரி, சமூகநலத்துறை அமைச்சர்:** பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) : இந்த ஆண்டு கோவை, மதுரை, வேலூர் ஆகிய இடங்களில் அமைக்கப்பட்டுள்ளது. ஒவ்வொன்றிலும் 50 சிறுவர்கள் ஒருவேளை உணவோடு தங்கவைக்கப்படுவார்கள். இதர நகரங்களில் இதுபோன்ற இல்லங்கள் கட்டுவதற்கு அந்தந்த இடங்களில் உள்ள சிறுவர்களைப் பொறுத்து பரிசீலிக்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**திரு. ஆர். பி. பரமசிவம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இங்கே கூறப்பட்ட பதிலுக்கு நன்றி. சென்னை போன்ற பெரிய